# துவாக்குடி நகராட்சி

| மன்ற கூட்ட நாள் | தீர்மான எண் | பொருள் | அலுவலகக் குறிப்பு |
|---|---|---|---|
| ***2021–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 9–ம் தேதி வியாழக்கிழமை காலை 10.15 மணிக்கு துவாக்குடி நகராட்சி அலுவலகத்தில் கீழ்கண்ட பொருள்கள் குறித்து ஆலோசித்து முடிவெடுக்க சாதாரணக் கூட்டம் நடைபெறும்.*** | | | |
| 09.09.2021 | 646 | **பொருள் எண்.1**<br>தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்பு 2021–22–ன் கீழ் நடைபெற்ற சட்டமன்ற கூட்டத்தொடரில் நகராட்சி நிர்வாக துறை மான்ய கோரிக்கையின் போது மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்கள் வெளியிட்ட அறிவிப்பின் படியும், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.20028/2021/தி2 நாள்: 08.09.2021–ல் தெரிவித்துள்ளபடியும், மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் விளையாட்டு திடல்கள் மற்றும் பூங்காக்கள் மேம்படுத்த அறிவிப்பினை வெளியிட்டுள்ளார். எனவே, இந்நகராட்சியில் உள்ள ராவுத்தான் மேடு (அய்யப்பநகர்) சர்வே எண். 282/1எ1 மற்றும் பெல்நகர் பகுதிகளில் பூங்காக்கள் அமைக்கும் பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ. 100.00 இலட்சத்திற்கு விரிவான திட்ட அறிக்கையுடன் கூடிய கருத்துருவினை சமர்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:** மன்றம் வழங்கலாம்.<br>**ந.க.எண்:** இ1/1130/2021 | அனுமதிக்கப்பட்டது. |
| | 647 | **பொருள் எண்.2**<br>தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்பு 2021–22–ன் கீழ் நடைபெற்ற சட்டமன்ற கூட்டத்தொடரில் நகராட்சி நிர்வாக துறை மான்ய கோரிக்கையின் போது மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்கள் வெளியிட்ட அறிவிப்பின் படியும், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.14006/2021/தி2–2 நாள்: 08.09.2021–ல் தெரிவித்துள்ளபடியும், தகன மேடையினை நவீன தகன மேடைகளாக மாற்றும் பணிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ. 150.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு துவாக்குடி நகராட்சியில் திருச்சி தஞ்சை சாலை பகுதியில் சர்வே எண். 175/6–ல் உள்ள தகன மேடையினை நவீன எரிவாயு தகன மேடைகளாக மாற்றும் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:** மன்றம் வழங்கலாம்.<br>**ந.க.எண்:** இ1/1129/2021 | அனுமதிக்கப்பட்டது |
| | 648 | **பொருள் எண்.3**<br>துவாக்குடி நகராட்சி பகுதியில் 2021–22 பொது நிதியின் கீழ் கீழ்கண்ட பணி மேற்கொள்ள 03.09.2021 – தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | | |
| 649 | <table><tr><th>வ. எண்</th><th>வேலையின் விபரம்</th><th>மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்)</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தப் புள்ளி தொகை</th></tr><tr><td>1.</td><td>நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரகம், தஞ்சாவூர் அலுவலகத்திற்கு உயர் தரம் வாய்ந்த வலைப்புகைப்பட கருவி வாங்கி பொருத்துதல் பணி.</td><td>4.00</td><td>M/S Dhan Enterprices<br>M/S Precise Sensors</td><td>ரூ. 338930.00/–<br>ரூ. 340000.00/–</td></tr></table><br>**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண்: 885/ 2021 / இ1**<br>**பொருள் எண்.4**<br>துவாக்குடி நகராட்சியின் பொது நிதி (குடிநீர் நிதி) 2021–22–ன் கீழ் கீழ்கண்ட பணி மேற்கொள்ள 08.09.2021 –ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><table><tr><th>வ. எண்</th><th>வேலையின் விபரம்</th><th>மதிப்பீடு (ரூ.இலட்ச த்தில்)</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி சதவீதம்</th></tr><tr><td>1.</td><td>வார்டு எண் 1 முதல் 6 வரை உள்ள பகுதிகளில் குடிநீர் விநியோக குழாய், அடிபம்புகள் மற்றும் மினி பவர் பம்புகள் வருடாந்திர பணி மேற்கொள்ளுதல்</td><td>5.00</td><td>எஸ்.ஏ. அரசு<br>எம். ஜீவானந்தம்</td><td>மதிப்பீட்டை விட 0.05 % குறைவு<br>மதிப்பீட்டை விட 0.60 % அதிகம்</td></tr></table><br>**அலுவலக குறிப்பு : –** 1. குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள எஸ்.ஏ. அரசு ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.<br>2.மேற்படி பணி குடிநீர் பணி என்பதால் பணியின் அவசர அவசியம் கருதி வேலை உத்திரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |
| 650 | **ந.க.எண். 410 /2020/இ1**<br>**பொருள் எண்.5**<br>மாவட்ட ஆட்சித்தலைவர், திருச்சிராப்பள்ளி அவர்களின் 13.08.2021 தேதியன்று நடைபெற்ற ஆய்வுகூட்ட அறிவுரைகளின் படி துவாக்குடி நகராட்சி மற்றும் பொது சுகாதார துறை இணைந்து நடத்தும் மெகா கோவிட் தடுப்பூசி சிறப்பு முகாம்களை நடத்தி வருகிறது. மேற்படி, முகாம்களுக்கு தேவையான பணியாளர்கள், சாமியான பந்தல், நாற்காலி, மேஜை, தண்ணீர் வசதி, உணவு வசதிகளுக்கு ஏற்கனவே மன்றத்தின் அனுமதி பெற்று ரூ.4,00,000/– செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி முகாம்கள் தொடர்ந்து நடைபெற வேண்டியுள்ளதால் தடுப்பூசி முகாம்களுக்கு தேவையான சாமியான பந்தல், நாற்காலி, மேஜை ஆகிய பொருட்களை வாங்குவதற்கும் வரும் காலங்களில் தடுப்பூசி | அனுமதிக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | 651 | முகாம் முடிந்த பிறகு நகராட்சிக்கு சொந்தமான சமுதாய கூடங்களுக்கு மேற்படி பொருட்களை பயன்படுத்திக்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.**1,00,000/–** மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு : –** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண். 1128/2021/எச்1**<br>**பொருள் எண்.6**<br>இந்நகராட்சி எல்லைக்குட்ட பகுதிகளில் டெங்கு கொசு ஒழிப்பு பணியாளர்களை பயன்படுத்த துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் திருச்சிராப்பள்ளி ந.க.எண் அ3/4417/2019 நாள் 23.05.2020ம் தேதிய கடிதம் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் அவர்களின் ந.க.எண் 1256/2021/அ3, நாள் 10.07.202ம் ததிய கடிதத்தில் கண்டுள்ள விவரப்படி தற்போது ஓம் மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்கள் மூலம் 20 நபர்களை பயன்படுத்தி பணி நடைபெற்று வருகிறது. தற்போது மேற்படி 20 நபர்கள் போதுமானதாக இல்லை என கருதப்படுவதால் மேலும் 6 நபர்களை 17.08.2021ம் தேதி முதல் பயன்படுத்திக்கொள்ளவும் மேற்படியான பணியாளர்களுக்கு ஊதயம் வழங்கவும், மேலும் தற்போது உள்ள 20 பணியாளர்கள் மற்றும் கூடுதல் பணியாளர்கள் 6 நபர்களையும் சேர்த்து 26 பணியாளர்களை பொது சுகாதாரத்தை கருத்தில் கொண்டு பயன்படுத்திக்கொள்ளவும் ஊதியம் வழங்க உத்தேச செலவினம் ரூ.10,00,000/- மட்டும் (01.12.2021 முதல் 28.02.2022 வரை) பயன்படுத்தி பணி செய்யவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அ.கு. மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண் எச்1/738/2020 | அனுமதிக்கப்ப ட்டது. |

ஆணையர்(பொ),
துவாக்குடி நகராட்சி.

# துவாக்குடி நகராட்சி

| மன்ற கூட்ட நாள் | தீர்மான எண் | பொருள் | அலுவலகக் குறிப்பு |
|---|---|---|---|
| ***2021*–ம் ஆண்டு *செப்டம்பர்* மாதம் 24–ம் தேதி *வெள்ளிக்கிழமை* காலை *10.15* மணிக்கு துவாக்குடி நகராட்சி அலுவலகத்தில் கீழ்கண்ட பொருள்கள் குறித்து ஆலோசித்து முடிவெடுக்க சாதாரணக் கூட்டம் நடைபெறும்.* | | | |
| 24.09.2021 | 652 | **பொருள் எண்.1**<br>துவாக்குடி நகராட்சியின் அலுவலகத்திலுள்ளஅனைத்து பிரிவுகளிலும் பயன்படுத்தப்பட்டு வரும் கணினி பிரிண்டர்களுக்கு தேவையான டோனர் சப்ளை செய்தல் ஆகியவற்றிற்கு வருடாந்திர பராமரிப்பு 2021–22 ஆம் ஆண்டிற்கு பொது நிதியின் கீழ் மேற்கொள்ள உண்டான செலவினம் ரூ.2.50 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u> :–**<br>**1.** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**2.** பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சியின் பொதுநிதியில் உடன் ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்: 430 /2020/இ1** | அனுமதிக்கப்பட்டது. |
| | 653 | **பொருள் எண்.2**<br>தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்பு 2021–22–ன் கீழ் நடைபெற்ற சட்டமன்ற கூட்டத்தொடரில் நகராட்சி நிர்வாக துறை மான்ய கோரிக்கையின் போது மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்கள் வெளியிட்ட அறிவிப்பின் படியும், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.14000/2021/இ1 நாள்: 09.09.2021–ல் தெரிவித்துள்ளபடியும், துவாக்குடி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தெருவிளக்கு இல்லாத இடங்களில் புதியதாக தெருவிளக்குகள் பொருத்தும் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ. 320.00 இலட்சத்திற்கு விரிவான திட்ட அறிக்கையுடன் கூடிய கருத்துருவினை சமர்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்:** இ1/1142/2021 | அனுமதிக்கப்பட்டது |
| | 654 | **பொருள் எண்.3**<br>தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்பு 2021–22–ன் கீழ் நடைபெற்ற சட்டமன்ற கூட்டத்தொடரில் நகராட்சி நிர்வாக துறை மான்ய கோரிக்கையின் போது மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்கள் வெளியிட்ட அறிவிப்பின் படி துவாக்குடி நகராட்சியில் உள்ள வார்டு எண். 5 ராவுத்தான் மேடு மடத்தான் குளம் மற்றும் வார்டு எண்.1 உடையான் குளம் ஆகிய குளங்களை மேம்படுத்தும் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள ரூ. 300.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்:** இ1/1175/2021

655 **பொருள் எண்.4**

தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்பு 2021–22–ன் கீழ் நடைபெற்ற சட்டமன்ற கூட்டத்தொடரில் நகராட்சி நிர்வாக துறை மான்ய கோரிக்கையின் போது மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்கள் வெளியிட்ட அறிவிப்பின் படி துவாக்குடி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மண் சாலைகளை தார்சாலைகளாக மாற்றி அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ. 340.00 இலட்சத்திற்கு விரிவான திட்ட அறிக்கையுடன் கூடிய கருத்துருவினை சமர்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அனுமதிக்கப்பட்டது.

**அலுவலக குறிப்பு:** மன்றம்அனுமதிக்கலாம்.

**ந.க.எண்:** இ1/1181/2021

656 **பொருள் எண்.5**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளதற்கிணங்க, சாலையோர வியாபாரிகள் மேம்பாட்டிற்கு NULM திட்டம் 2021–22–ன் தள்ளுவண்டிகள் வழங்க திருத்தய விரிவான திட்ட அறிக்கையின் படி முதற்கட்டமாக 45 பயனாளிகளுக்கு ரூ. 32,40,000/– மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் அவர்கள் வழியாக நிர்வாக அனுமதி பெற கருத்துரு சமர்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அனுமதிக்கப்பட்டது.

**அலுவலகக்குறிப்பு :–** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்: எப்1/0014/2014**

657 **பொருள் எண்.6**

துவாக்குடி நகராட்சி பகுதியில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்ட பணிகள் குறித்த விவரத்தினை 2021-ம் ஆண்டு தொழில் மலர் மற்றும் செய்தி மலரில் விளம்பரம் செய்தமைக்கு நிறுவனங்களிடமிருந்து வரப்பெற்ற பில் பட்டியல் கீழ்கண்டவாறு

| S.NO | NAME OF THE PUBLICATION | AMOUNT |
|---|---|---|
| 1 | MALAI MURASU | ரூ. 4,999/- |
| 2 | MALAI MALAR | ரூ. 11,000/- |
| 3 | THINAKARAN | ரூ. 9,135/- |
| | TOTAL | ரூ. 25,134/- |

தொகையினை வழங்க மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அனுமதிக்கப்பட்டது.

**அலுவலகக்குறிப்பு-** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்:867/2021/E1**

658 **பொருள் எண்.7**

துவாக்குடி நகராட்சியில் சிறப்பு சாலைத் திட்டம் (SRP) 2020–21–ன் கீழ் முடிக்கப்பட்டுள்ள மூன்று சிப்பம் சாலைப்பணிகளுக்கு TUFIDCO அலுவலகத்திலிருந்து வரப்பெற்ற கடிதம் Lr.No.TUFIDCO/SRP/201/ AM(M)/2021 நாள்.

அனுமதிக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| | | 15.07.2021–ல் தெரிவித்துள்ளபடி, மேற்கொண்ட சாலைப்பணிகளுக்கு பயன்படுத்தப்படும் பொருட்களின் உறுதித்தன்மை மற்றும் முடிவுற்ற பணிகளை மூன்றாம் நபர் ஆய்வு (Third Party Inspection) செய்து தரச்சான்று அறிக்கை சமர்பிக்க உள்ளதால், மேற்படி சாலைப்பணிகளுக்கு தரச்சான்று அறிக்கை வழங்க முதல்வர், அரசு பொறியியல் கல்லூரி, அண்ணா தொழில்நுட்ப பல்கலை கழகம், பட்டுக்கோட்டை அவர்களிடமிருந்து 25.08.2021 –ல் வரப்பெற்ற சம்மத கடிதத்தின் படி, 1 சிப்பத்திற்கு ரூ.30,000/– வீதம் மூன்று சிப்பங்களுக்கு ரூ. 90,000/– தொகையை வங்கி வரைவோலையாக அனுப்ப மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:** மன்றம்அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்: 1305/2020/இ1** | |
| | 659 | **பொருள் எண்.8**<br>துவாக்குடி நகராட்சியில் செயல்பட்டு வரும் அம்மா உணவகத்திற்கு தேவையான விற்பணை ரசீதுகள் அச்சிட்டு வழங்கியமைக்கான திருச்சிராப்பள்ளி , கூட்டுறவு அச்சகம் – துவாக்குடி, அவர்களிடமிருந்து வரப்பெற்ற பில் பட்டியல் கீழ்கண்டவாறு<br>இட்லி டோக்கன் 200Nos ரூ. 20000/.<br>GST 18 % ரூ. 3600/.<br>மொத்தம் ரூ. 23600/.<br>மேற்கண்ட பில் பட்டியல் தொகையினை திருச்சிராப்பள்ளி, கூட்டுறவ அச்சகம் . துவாக்குடிக்கு வழங்க நகர் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு :–** மன்றம் அனுமதிக்கலாம்,<br>ந.க.எண் 316/C1/2016 | அனுமதிக்கப்ப ட்டது. |
| | 660 | **பொருள் எண்.9**<br>தூய்மை இந்தியா திட்டம் 2018–19 ன் கீழ் துவாக்குடி நகராட்சி பகுதியில் திடகழிவுகளை சேகரம் செய்வதற்கு பேட்டரியால் இயங்கும் வாகனங்கள் 14 எண்ணிக்கையில் உள்ளது. மேற்படி, வாகனங்களுக்கு இரண்டு வருட காலமாக எந்தவித பராமரிப்பு பணியும் மேற்கொள்ளவில்லை. தற்போது வாகனங்களின் பேட்டரி பழுதாகி ஆங்காங்கே நிற்கும் நிலை ஏற்பட்டதால், தற்றபாது 14 எண்ணிக்கையிலான வாகனங்களுக்கு பராமரிப்பு பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினமாக ரூ.9.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு : –** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண்.** 1307/2018/எச்1 | அனுமதிக்கப்ப ட்டது. |
| | 661 | **பொருள் எண்.10**<br>துவாக்குடி நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் திடகழிவு மேலாண்மையில் பயன்படுத்தப்பட்டு வந்த உபயோகமற்ற டம்பர் ப்ளேசர் பின்கள் 34 எண்ணிக்கை, பைப்கள் மற்றும் இதர இரும்பு சாமான்கள் பழுதடைந்து உபயோக படுத்த இயலாத நிலையில் உள்ளதால் 12.11.2021 –ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.00 மணி அளவில் பொது ஏலம் கோருவதற்கு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு :–** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண்: இ1/1033/2019** | அனுமதிக்கப்ப ட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | 662 | **<u>பொருள் எண்.662</u>**<br>துவாக்குடி நகராட்சிக்கு எதிராக தொடரப்படும் வழக்குகளில் ஆணையர் சார்பாக நீதிமன்றத்தில் ஆஜராகவும் வழக்கு தொடர்பாக எதிர்வாதுரை தயார் செய்யவும் Ms.809/2002, ம.பூபாலன் என்ற வழக்கறிஞரை துவாக்குடி நகர்மன்ற வழக்கறிஞராக நியமனம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அ.கு</u>** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்** 1310/C1/2021 | அனுமதிக்கப்பட்டது. |

ஆணையர்(பொ),
துவாக்குடி நகராட்சி.

# துவாக்குடி நகராட்சி

| மன்ற கூட்ட நாள் | தீர்மான எண் | பொருள் | அலுவலகக் குறிப்பு |
|---|---|---|---|

***2021–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30–ம் தேதி வியாழக்கிழமை காலை 10.15 மணிக்கு துவாக்குடி நகராட்சி அலுவலகத்தில் கீழ்கண்ட பொருள்கள் குறித்து ஆலோசித்து முடிவெடுக்க சாதாரணக் கூட்டம் நடைபெறும்.***

30.09.2021

663

**பொருள் எண்.1**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித எண் 29280/2020/IT நாள் 29/09/2021 தெரிவித்துள்ளதன்படி இந்நகராட்சியின் பயன்பாட்டிற்காக இணையதள சேவைக்கான VPN Server உபயோகத்திற்காக BSNL நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற பில்பட்டியல் கீழ்கண்டவாறு :-.

| Sl.No | ULB NAME | Annexure I Period 01.01.2021 To 31.03.2021 | Annexure II Period 01.04.2021 To 30.06.2021 | Total |
|---|---|---|---|---|
| 1 | Thuvakudi | 48295 | 48295 | 96590 |

மேற்படி பில்பட்டியலில் கண்ட தொகையினை BSNL நிறுவனத்திற்கு வழங்க நகர்மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு –** மன்றம் அனுமதி வழங்கலாம்

**ந.க.எண்** 302/இ1/2021

அலுவலகக் குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.

664

**பொருள் எண்.2**

துவாக்குடி நகராட்சி 15–வது மத்திய நிதிக்குழு மான்யம் 2020–21 – 2வது தவணையின் கீழ் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள 28.09.2021 – தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | துவாக்குடி நகராட்சியில் முத்துராமலிங்க தேவர் சாலை முதல் கண்ணனூார் மாரியம்மன் கோவில் வரை குடிநீர் விநியோகக்குழாய் அமைத்தல். | 9.95 | M/s. RM இன்ஜினியரிங்<br>திருமதி. S. சுமதி | மதிப்பீட்டை விட 0.14 % குறைவு<br>மதிப்பீட்டை விட 0.31% அதிகம் |

அலுவலகக் குறிப்பு: அனுமதிக்கப்பட்டது

| | | | | |
|---|---|---|---|---|
| 2. | சமாதான புரம் பிரதான சாலையில் குடிநீர் விநியோகக்குழாய் அமைத்தல். | 9.95 | M/s. RM இன்ஜினியரிங்<br><br>திருமதி. S. சுமதி | மதிப்பீட்டை விட 0.10 % குறைவு<br>மதிப்பீட்டை விட 0.44% அதிகம் |
| 3. | முத்துராமலிங்க தேவர் சாலையில் உள்ள மேல்நிலை நீர்தேக்கத்தொட்டியில் நீர் அளவுமானி மற்றும் அளவுகோல் பொருத்துதல் மற்றும் சமாதானபுரம் குறுக்கு தெருவிற்கு குடிநீர் விநியோகக்குழாய் அமைத்தல். | 9.50 | திரு. நீலமேகம்<br><br>M/s. RM இன்ஜினியரிங் | மதிப்பீட்டை விட 0.09 % குறைவு<br>மதிப்பீட்டை விட 0.24% அதிகம் |
| 4. | அண்ணாநகர் முதல் அன்பு பள்ளி வரை ஆழ்துளை கிணறுடன் HDPE தொட்டி அமைத்தல் | 9.00 | திருமதி. S. சுமதி<br><br>M/s. RM இன்ஜினியரிங் | மதிப்பீட்டை விட 0.17 % குறைவு<br>மதிப்பீட்டை விட 0.16% அதிகம் |
| 5. | பழைய கருப்பு கோவில் தெரு முதல் முத்துராமலிங்க தேவர் சாலை பொது தெரு வரை ஆழ்துளை கிணறுடன் HDPE தொட்டி அமைத்தல் | 7.00 | திருமதி. S. சுமதி<br><br>M/s. RM இன்ஜினியரிங் | மதிப்பீட்டை விட 0.15 % குறைவு<br>மதிப்பீட்டை விட 0.90% அதிகம் |
| 6. | அய்யம்பட்டி சுடுகாடு பகுதியில் ஆழ்துளை கிணறுடன் HDPE தொட்டி அமைத்தல் | 4.00 | திருமதி. S. சுமதி<br><br>M/s. RM இன்ஜினியரிங் | மதிப்பீட்டை விட 0.07 % குறைவு<br>மதிப்பீட்டை விட 0.37% அதிகம் |
| 7. | பெரியார் திடலில் உள்ள மேல்நிலை நீர்தேக்கத்தொட்டியை சரிசெய்தல் மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் | 9.90 | திரு. நீலமேகம்<br><br>M/s. RM இன்ஜினியரிங் | மதிப்பீட்டை விட 0.07 % குறைவு<br>மதிப்பீட்டை விட 0.67% அதிகம் |
| 8. | வார்டு எண்.1 அங்காளம்மன் கோவில் தெரு சீரணி அரங்கம் அருகில் ஆழ்துளை கிணறுடன் HDPE தொட்டி அமைத்தல் | 4.70 | திருமதி. S. சுமதி<br><br>M/s. RM இன்ஜினியரிங் | மதிப்பீட்டை விட 0.08 % குறைவு<br>மதிப்பீட்டை விட 0.14% அதிகம் |

**அலுவலக குறிப்பு : –** ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.** 1426/ 2020 /இ1

665 **பொருள் எண்.3**

துவாக்குடி நகராட்சி அலுவலக பயன்பாட்டில் உள்ள JCB வாகனம் எண் **TN 45 BY 2588 –ல் உள்ள Transmission Overhaul kit 3DX, Pump assembly, Pisten Rod, Track Rod, Gear lever, Filter Kit, Rear Axle Oil, All Oil services** மற்றும் இதர பணிகள் சரிசெய்ய இந்நகராட்சியின் பொறியியல் பிரிவின் திட்டப்பணிகள் மேற்கொள்ளவும், பொது சுகாதார பணிகள் மேற்கொள்ளவும் மற்றும் நகராட்சியின் பணிகளை மேற்கொள்ள முடியாமல் சிரமம் ஏற்படுவதால் மேற்கண்ட வாகனத்தின் பழுதுகளை சரி செய்வதற்கு உத்தேச செலவினமாக ரூ.2,00,000/– மன்றத்தின் அனுமதி ஒப்புதலுக்கு, மேலும் அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனமான **M/s.JAYARAJ Automobile agency** நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளி வழங்குவதற்கு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது. அனுமதிக்கப்பட்டது

**அலுவலக குறிப்பு : –** மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். 1355/2021/இ1

666 **பொருள் எண்.4**

துவாக்குடி நகராட்சியின் பொது நிதி (குடிநீர் நிதி) 2021–22–ன் கீழ் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள 24.09.2021 –ம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது. அனுமதிக்கப்பட்டது.

| வ. எண் | வேலையின் விபரம் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி |
|---|---|---|---|---|
| 1. | துவாக்குடி நகராட்சியின் துவாக்குடி, பெல்நகர், முத்துராமலிங்க தேவர்சாலை மற்றும் பெரியார் திடல் பகுதிகளில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு 2021–22 ம் நிதியாண்டிற்கு லிக்யூடு குளோரின் சப்ளை செய்தல் மற்றும் குளோரின் மோட்டார் மற்றும் இதர வருடாந்திர பராமரிப்பு மேற்கொள்ளுதல் | 9.90 | M/s. தமிழ்நாடு கெமிக்கல்ஸ் இண்டஸ்ரீஸ்<br>M/s. சுருதி அலும் இண்டஸ்ரீஸ் | ரூ. 17.00 ( ஒரு லிட்டருக்கு)<br>ரூ. 18.00 ( ஒரு லிட்டருக்கு) |

**அலுவலக குறிப்பு : – 1.** குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s. தமிழ்நாடு கெமிக்கல்ஸ் இண்டஸ்ரீஸ் ஒப்பந்தப்புள்ளியை அனுமதித்து வேலை உத்திரவு வழங்கலாம்.

2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி வேலை உத்திரவு வழங்கியதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். 495 /2019/இ1**

667 **பொருள் எண்.5**

2021 ம் ஆண்டு உள்ளாட்சி சாதாரண தேர்தல் நடைபெறுவதற்கு ஏதுவாக மாநிலதேர்தல் ஆணையம் மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலர், திருச்சிராப்பள்ளி அவர்கள் உரிய அறிவுரை வழங்கியுள்ளார்கள். எனவே 2021 ம் ஆண்டு உள்ளாட்சி சாதாரண தேர்தல் நடத்துவதற்கு நகராட்சியின் வருவாய் மூலதன நிதியிலிருந்து ரூ.15.00 லட்சம் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. அனுமதிக்கப்பட்டது.

அ.குமன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். 1263/சி1/2021

ஆணையர்(பொ),
துவாக்குடி நகராட்சி.